


புதுச்சேரி கதிர்காமம் தொகுதியில் திமுக உறுப்பினர் சேர்க்கையை ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார். அருகில் மாநில அமைப்பாளர் இரா.சிவா, தொகுதி செயலாளர் வடிவேல் ஆகியோர் உள்ளனர்.

### அமைப்பாளர் இரா.சிவா முன்னிலையில்

# புதுச்சேரியில் 8 தொகுதிகளில் கழக உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, அக்.16-

தி.மு.கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்கள் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், இதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் மண்-மொழி-மானம் காக்க, தி.மு.கழகத்தின் சார்பில் “உடன்பிறப்பே வா” பரப்புரையை முன்னெடுக்க ஆணையிட்டுள்ளார்.

புதுச்சேரி, மாநிலத்தில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்குகளைக் கழக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற இலக்கும் நிர்ணயிக்கப்பட்டு, தலைமைக் கழகத்தால் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., அவர்கள் தலைமையில் ஏற்கனவே முத்தியால்பேட்டை, உப்பளம், முதலியார்பேட்டை, நெல்லித்தோப்பு, உருளையனபேட்டை ஆகிய ஐந்து தொகுதிகளில் கடந்த 6-ஆம் தேதி உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக இன்று ஊசுடு தொகுதிக்கு உட்பட்ட உளவாய்க்கால் கிராமத்திலும், இந்திரா நகர் தொகுதி தர்மாபுரியிலும், கதிர்காமம் தொகுதி சண்முகாபுரத்திலும், தட்டாஞ்சாவடி தொகுதி பாக்குமுடையான்பேட்டிலும், இலாசுப்பேட்டை தொகுதி அரசு மருத்துவமனை அருகிலும், காலாப்பட்டு தொகுதி கருவடிக்குப்பம் பாரதி நகரிலும், காமராஜர் நகர் தொகுதி கிருஷ்ணா நகரிலும், ராஜ் பவன் தொகுதி மிஷன் வீதி - பெருமாள் கோவில் சந்திப்பிலும் திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் தொடங்கப்பட்டது.

முகாமிற்கு, மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் தலைமை வகித்தார்.

அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திமுக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., கலந்து கொண்டு, உறுப்பினர் சேர்க்கும் பணியை தொடங்கி வைத்தார்.

முகாமிற்கான ஏற்பாடுகளை தொகுதி செயலாளர்கள் பி. சா. இளஞ்செழியப்பாண்டியன், செ. ராதாகிருஷ்ணன், ப. வடிவேல், க.ர. ஆறுமுகம், கோ. தியாகராஜன், சே. சத்தியவேலு, ர. சிவக்குமார், ஜெ. மோகன் மற்றும் தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளரான மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ரோ. நித்தீஷ், இந்திரா நகர் பசுபிக் சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தா. சரவணன், பூ. மூர்த்தி, மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், வீ. சண்முகம், ஜெ. வேலன், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், கே.பி. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி கலிய. கார்த்திகேயன், ம. கலைவாணன், அணிகளின் அமைப்பாளர்கள் தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு. ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன் தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ. முகிலன், ஆ. அகிலன் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், அக். 16 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், மாநகர வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட, நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது நேற்று (15.10.2025 - புதன் கிழமை) காலை 9.00 மணிக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார்.

சிறப்புவிருந்தினர்களாக நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சி.எஸ்.ஆனந்த், கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஸ்ரீதர் ரொட்ரிகோ கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவதற்கு கழக நிர்வாகிகள் அனைவரும் பூத் களப் பணிகளை விரைவுபடுத்திட ஆலோசனைகள் வழங்கினார். மேலும், கூட்டத்தில் ஒன்றிய அரசின் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் எதிர்கொள்ளும் வகையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பாக முகவர் களும் (BLA2) மேற்கொள்ள வேண்டிய பூத் களப்பணிக்கான புத்தகங்களை வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம், மாவட்ட துணை செயலாளர்கள் கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், மோ.பிராங்கிளின், த.செல்வன்,

பி.சற்குரு கண்ணன், ஏ.சுரேந்திர குமார், ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ. மிலன், நகர கழக செயலாளர் குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ. ஜவகர், என்.பி.துரை, த.ஜீவா, எம்.சேக்மீரான், பேரூர், மாநகர வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட, நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், மாநகர வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட, நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக நாகர்கோவில் தொகுதி பார்வையாளர் சி.எஸ்.ஆனந்த், கன்னியாகுமரி தொகுதி பார்வையாளர் ீரீதர் ரொட்ரிகோ கலந்து கொண்டனர். கூட்டத்தில் எப்.எம்.இராஜரத்தினம், கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம், எம்.மதியழகன், மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஏ.சுரேந்திரகுமார், ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், என்.பி.துரை, த.ஜீவா, எம்.சேக்மீரான் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் பணிகள் நிலை குழு தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதிக்கு உட்பட்ட பகுதி மாவட்ட வட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து சேப்பாக்கம் பகுதிக்கு உட்பட்ட அணிகளின் நிர்வாகிகளுக்கு சேப்பாக்கம் பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் எஸ். மதன்மோகன் ஏற்பாட்டில் சுமார் 500 பேருக்கு பட்டாசு புத்தாடை இனிப்பு உள்ளிட்ட தொகுப்புகளை தீபாவளி பரிசாக வழங்கினர்.

### சென்னை மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் - 2026

# மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

சென்னை, அக். 16-

சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி, அண்ணாநகர், ஆயிரம்விளக்கு ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான ஒருங்கிணைப்பாளர்கள் நியமனத்தை மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு அவர்கள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி அறிவித்துள்ளார்.

1. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:
வி.தேவேந்திரன் - போன்: 98400 60975

2. சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்:
சி. சியாமளா - போன்: 94440 05665

3. அண்ணாநகர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்:
எம். பாலசந்தர் - போன்: 95516 82000

4. ஆயிரம்விளக்கு தொகுதி ஒருங்கிணைப்பாளர்:



கே. கமலக்கண்ணன் - போன்: 98844 88347

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

### ஏ.வி.ஆறுமுகம் எற்பாட்டில்

# திருவொற்றியூர் மத்திய பகுதி பாக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, அக். 16 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி சார்பில் பாக ஒருங்கிணைப்பாளர்கள்BLA, BLC, BDA, BYA, கலந்துரையாடல் கூட்டம் பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் இதில் வட்டச் செயலாளர்கள் வா.முத்துசாமி, த.ச.கரிகாலசோழன். சாலை டி. கணேசன்,செல்வம். பகுதி நிர்வாகிகள் தினகரன், ரமேஷ் குமார், நாகலிங்கம், துர்கா கோதண்டம், மாவட்ட பிரதிநிதிகள் சஞ்சீவி ஸ்ரீதர், கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ்,

ஞானமூர்த்தி, தினகரன் பாபு பிச்சாண்டி ராமமூர்த்தி, தமோதிரன்,மங்கைலட்சுமி, தரினிபாபு,சுந்தர், ராமு, தயாளன் குலசேகரன் பலராமன்,ஆனந்தி, ராமசந்திரன்,மகேந்திரன்,ராஜா, ஏ.வி.முருகன், கதிரவன் மாவட்ட அணிகலின் அமைப்பாளர்கள் கேபிள் த வேல் கணேசன் உதயராஜ், வெங்கடேசன், சுதர்சன், எழில் மற்றும் பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA2,BLC, BDA, BYA வட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி பகவான் முகவர்கள், கழக முன்னோடிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசுப் பொருள்கள் வழங்கி சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியக் கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், அக்16-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (17.10.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி, சி.எல்.சி. திருமண மண்டபம் படப்பையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

வா.நந்தகோபால், சி. பார்த்தசாரதி, மூ. ராஜேந்திரன், எஸ். கர்ணன், குமுதா, சுமன், டி..லோகநாதன், தா. ஏழுமலை, என்.வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் பரிசுப் பொருள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் திருபெருமந்தூர் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ. வந்தேமாதரம், குன்றத்தூர் ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2), வாக்குச்சாவடி முகவர்கள் (பி.டி.ஏ.) உள்ளிட்ட அனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

கழகத் தோழர்களுக்கு தீபாவளி பரிசுகள் வழங்குதல், நவம்பர் 27 துணை முதல்வர் பிறந்தநாள் விழா, 2026 சட்டமன்ற தேர்தல் பணி ,கழக வளர்ச்சி பணி.

இவ்வாறு தெற்கு ஒன்றியக் கழக செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - முனைவர் தா.கி.கிருபாகரன், 320, இந்திரா நகர், புஞ்சைதுறையம்பாளையம், கோபி, ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க.சூரியபிரசாந்த், 6/18, அண்ணமார் கோவில் தெரு, தட்டாம்புதூர் குடியிருப்பு, கடத்தூர், சத்தி, ஈரோடு மாவட்டம். 2) கு.செந்தூர், 294, குருமந்தூரார் இல்லம், தாளவாடி, ஈரோடு மாவட்டம். 3) செ.சுதா, 193, கொண்டையம்பாளையம், வரப்பாளையம் அஞ்சல், நம்பியூர், ஈரோடு மாவட்டம். 4) வி.கே.சுகானந்தம், 5/70, ரைஸ் மில் வீதி, பா.வெள்ளாளபாளையம், கோபி, ஈரோடு மாவட்டம். 5) சே.முத்துகுமார், 266, செ.அம்மன் கோவில் தோட்டம், எண்ணமங்கலம், அந்தியூர், ஈரோடு மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15-10-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் - பெ. அருள்ஜோதி சாலை வீதி, சி. மெய்யூர், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - செ. செந்தில்குமார் 4/104, தெற்கு வீதி, தி. எடையார் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - சே. சூர்யா 98, மாரியம்மன் கோவில் தெரு, தென்னமாதேவி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ர. சக்தி பழைய காலனி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) மு. ரமேஷ் புது ஏரிக்கரை, விராட்டிக்குப்பம் பாதை, விழுப்புரம் மாவட்டம். 3) மு. குணா தி. எடையார் மெயின் ரோடு, தி. எடையார், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) சு. ராமச்சந்திரன் மாரியம்மன் கோவில் தெரு, வாக்கூர் காலனி, வாக்கூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ப. சபரி முத்து 211, பிள்ளையார் கோவில் தெரு, ராதாபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15-10-2025.

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்
தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி